# உடுமலைப்பேட்டை நகராட்சி

## 30.11.2021ம் தேதிய சாதாரணக்கூட்ட மன்ற நிரல்

<table>
<tr><th>வ. எண்</th><th>நகர்மன்ற தீர்மான எண்</th><th>மன்றப்பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>1</td><td>1715</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி குட்டை திடல் அருகில் உள்ள நூலகக் கட்டிடம் பின்புறத்தில் கொட்டி வைக்கப்பட்டுள்ள கட்டிட இடிபாடுகள், உபயோகமற்ற பொருட்களை உடனடியாக அப்புறப்படுத்தத் தேவையான JCB மற்றும் Tipper வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி சுத்தம் செய்யும் பணி செய்யவும் அதற்காகத் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.40,000/- க்கும் மன்ற அனுமதி பெறலாம். மேலும் இப்பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணியினை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/s. RSM & Co வசம் மதிப்பீட்டு விலைக்கு ஒப்படைத்து வேலை உத்தரவு வழங்கி பணியைச் செய்து முடிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 3006/2021/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>2</td><td>1716</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களை பராமரிப்பு பணி மேற்கொள்ள இயக்குதல் மற்றும் பராமரிப்பு திட்டம் 2021-22 ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:19089/2021/இ2 நாள்:12.11.2021 ல் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது
<table>
<tr><th>வ. எண்</th><th>கழிப்பிடம் விபரம்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>CT</td><td>வார்டு எண் 15 ல் உள்ள ஜெய்லானி காலனி கழிப்பிடம் பராமரிப்பு பணி</td><td>4.30</td></tr>
<tr><td>2</td><td>CT</td><td>வார்டு எண் 30 கோமதி நகர் கழிப்பிடம் பராமரிப்பு பணி</td><td>4.20</td></tr>
<tr><td>3</td><td>PT</td><td>வார்டு எண் 11 ல் உள்ள மத்திய பேருந்து நிலைய கழிப்பிடம் பராமரிப்பு பணி</td><td>3.00</td></tr>
<tr><td>4</td><td>PT</td><td>வார்டு எண் 9 ல் உள்ள ராஜேந்திர சாலை கழிப்பிடம் பராமரிப்பு பணி</td><td>8.10</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td>19.60</td></tr>
</table>
மேற்கண்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண் 3177/2021/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **3** | 1717 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் 2020-2021-ம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட மற்றும் செயல்படுத்தப்படும் பணிகள் குறித்த விபரப் பட்டியலை தீக்கதிர் நாளிதழின் சிறப்பு தொழில் மலரில் 24.10.2021 அன்று பிரசுரம் செய்த வகைக்கு விளம்பர கட்டணத்தொகை ரூ.15000/-ஐ தீக்கதிர் நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண் 2588/2021/இ1)** | அனுமதிக்கப் பட்டது |
| **4** | 1718 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் 2020-2021-ம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட மற்றும் செயல்படுத்தப்படும் பணிகள் குறித்த விபரப் பட்டியலை தினகரன் நாளிதழின் தொழில் மலரில் 14.10.2021 அன்று பிரசுரம் செய்த வகைக்கு விளம்பர கட்டணத்தொகை ரூ.16800/-ஐ தினகரன் நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண் 2482/2021/இ1)** | அனுமதிக்கப் பட்டது |
| **5** | 1719 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டுவரும் அச்சம் மற்றும் அருவருக்கதக்க தொழில் புரியும் வணிகங்களான முடித்திருத்தம்,அழகு நிலையம் மற்றும் மசாஜ் செய்துவரும் வணிகங்களுக்கு தொழில் உரிமையாணை பெறப்பட வேண்டும் எனவும் இச்செய்தியினை விளம்பரம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கடிதஎண்:19725/J2/2019 நாள்:15.12.2020-ன்படி மேற்காணும் நிறுவனங்களை பத்திரிக்கையில் விளம்பரம் செய்தவதற்கு தோராய செலவினமாக ரூ.22,000/- ஆயிரமாகும். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 2821/2020/எச்2) | அனுமதிக்கப் பட்டது |
| **6** | 1720 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு உட்பட்ட புதிய டவுன் சர்வே வார்டு எண். G. பிளாக் எண். 15, நகரளவு எண். 10/3A, 10/3B, 10/3C, 1.02 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுகளாக பிரித்து தரக்கோரி திரு. A. மயில்சாமி, த/பெ. ஆறுமுகக்கவுண்டர் என்பவர் நேரடியாக 06.07.2021ம் தேதியில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களுக்கு மின்அஞ்சல் மூலம் நேரடியாக விண்ணப்பித்துள்ளார்.<br><br>விண்ணபத்தினை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் கூர்ந்தாய்வு செய்து அரசாணை எண் 181,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 9.12.2020ன்படி மேற்கண்ட புலத்தில் உத்தேச மனைப்பிரிவு சாலைகள், பொது உபயோக இடங்கள், TANGEDCO-ற்குரிய தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு உரிய இடமும், நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்து அதன் அசல் பத்திர நகலினை அனுப்பி வைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்படைப்பு செய்த பின்னர் மனுதாரர் உரிய அபிவிருத்தி பணிகள் செய்து தரக்கோரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அலுவலக கடிதம் எண் ந.க.எண் 2473/2021/வி.மா நாள் 29.07.2021ல் தெரிவிக்கப்பட்டிருந்தது. | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அதன்படி மனுதாரர் திரு. A. மயில்சாமி என்பவர் உடுமலைப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் சாலைகள்,சிறுபாலங்கள், பொது உபயோக இடங்கள், TANGEDCO-ற்குரிய தமிழ்நாடு மின்பகிர்மான இடத்தினையும், உடுமலைபேட்டை நகராட்சி ஆணையாளர் பெயரில் தானமாக எண் 7496/2021 நாள் 16.08.2021ல் ஒப்படைப்பு செய்து அசல் பத்திரம் நகராட்சியில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.<br>அரசாணையின்படி உரிய பொது உபயோக இடத்திற்கு அரசு தலைப்பு கணக்கு எண் 02602/ Directorate of Town and Country Planning for Reservation for (OSR) Land க்கு உரிய தொகை ரூ.9,64,000/- ஐ பாரத மாநில வங்கி, உடுமலைப்பேட்டை இ-சலான் கணினியின் மூலம் கட்டி சலான் எண் 20210728273601 நாள் 28.08.2021ல் கட்டி அசல் ரசீது கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.<br>சாலைகள், பொது உபயோக இடங்கள் மற்றும் பொது உபயோக இடத்திற்கான அரசு தலைப்பில் பணம் செலுத்தியதனால் அவ்விடத்திற்கு குடியிருப்பு மனைகளாக பிரித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) , மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களின் கடிதம் 2473/2021/திமா நாள் 14.09.2021ல் குடியிருப்பு மனைகளாக பிரித்து அதற்கு தொழில்நுட்ப அனுமதி எண் ம.வ/ந.ஊ.(தி.மா) எண் 235/2021 நாள் 14.09.2021ல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் அவர்களின் உரியஅபிவிருத்தி பணிகள் செய்துதரக்கோரி பொறியாளர் மேற்பார்வையாளர் மூலம் அவ்விடத்தில் உரிய மின்கம்பம் மற்றும் மின்விளக்கு 15W, LED விளக்கு அமைக்க நகராட்சி மின்கண்காணிப்பாளர் மூலம் இடம் ஆய்வு செய்து 28.09.2021ம் தேதிய குறிப்பில் கேட்பு ரூ.12000/-க்கு எழுதிதரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மனுதாரர் ரூ.12,000/- நகராட்சி அலுவலகத்தில் கட்டி பற்றுச்சீட்டு எண் 157/UMC/02/21-22/0009810 நாள் 02.11.2021ல்கட்டி ரசீது அசல் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. நகராட்சி குடிநீர் மேற்பார்வையாளர் குறிப்பு 01.10.2021ம் தேதிய நாளில் 90 எம். எம் விட்டமுள்ள பி.வி.சி 6 Kg/cm2 குடிநீர் பகிர்மானக் குழாய் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் நகராட்சி உதவிப்பொறியாளர் மேற்கண்ட இடத்தில் வரைபடத்தின்படி சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளதாக 05.10.2021ம் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>ஆகவே அம்மனைப்பிரிவில் வரும் சாலைகள், மழைநீர் வடிகால், சிறுபாலம, மின்கம்ப விளக்கு மற்றும் பொது உபயோக இடங்களினை நகராட்சி பராமரிப்பில் ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : பராமரிப்பில் ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 370/2021/எப்1) | |
| **7** | 1721 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான மத்திய பேருந்து நிலையத்தில் பயணிகள் காத்திருப்பு பகுதி மற்றும் கடைகள் அமைந்துள்ள கட்டிடத்தின் மேற்கூரையில் ஆங்காங்கு சிமெண்ட் கான்கிரீட் மற்றும் பூச்சு உதிர்ந்து | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | கம்பி வெளியில் தெரியும் வண்ணம் உள்ளது. மேலும் மத்திய பேருந்து நிலையத்தில் புறக்காவல் நிலையம் அருகில் அமராவதி மற்றும் மூணாறு பேருந்துகள் நிறுத்துமிடத்தில் மேற்கூரைப் பூச்சு பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய ரூ.2,50,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 2958/2021/இ1) | |
| **8** | 1722 | உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக கட்டிடத்தில் மின் தடை ஏற்படும் நேரங்களில் இயக்குவதற்காக 25KVA kirloskar ஜெனரேட்டர் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி ஜெனரேட்டரை இயக்குவதற்கு தேவையான பேட்டரி விநியோகம் செய்யப்பட்டு 3 ஆண்டுகள் ஆகிவிட்டதால் மேற்படி பேட்டரி பழுதடைந்த காரணத்தினால் மின் தடை ஏற்படும் நேரங்களில் ஜெனரேட்டரை இயக்குவதில் மிகுந்த சிரமம் ஏற்படுவதால் புதிதாக 12V-100AH பேட்டரி ஒன்று விநியோகம் செய்து பொருத்துவதற்கு விலைப்புள்ளிகள் கோரியதில் அதற்குண்டான செலவின தொகை ரூ.18880/- ஆகும் என அறியப்பட்டுள்ளது. எனவே மேற்படி பேட்டரி விநியோகம் செய்து பொருத்துவதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கியும் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 3119/2021/இ2) | அனுமதிக்கப் பட்டது |
| **9** | 1723 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் அமமணலிங்க வீதியில் உள்ள கணக்கம்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மின் இணைப்புப் பெட்டியில் மின் ஒயர்கள் கருகி தீ விபத்து ஏற்படுகிறது. எனவே மின்விபத்து ஏற்படாத வகையில் அதனை சரி செய்யவும் அதற்காகும் செலவினத்தொகை ரூ.13000/- ஆகும். எனவே மின் இணைப்புப் பெட்டியில் மின் ஒயர்களை மாற்றி அமைப்பதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கியும் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 3128/2021/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **10** | 1724 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட டவுன் சர்வே வார்டு எண். D, . பிளாக் எண்.7, நகரளவு எண். 28ல் 0.83.57.50 ச.மீ பரப்பளவுள்ள உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தின் முன்பகுதியில் 0.00.00.60 ச.மீ பரப்பளவு இடத்தினை தேர்வு செய்துள்ளதாகவும், தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கரின் உருவச் சிலை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண். 7735/2021/அ2, நாள். 28.10.2021ல் தெரிவித்துள்ளார்.<br>Guidelines & Procedures on Installation of Statues. கடித எண் RA VII (1) / 1946/ 2019 Dt. 26.03.2019ன்படி “Resolutiion copy and | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>comprehensive report with supporting documents should be obtained from the Local Bodies Concerned viz from the Commissioner of Municipality " என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சுற்றறிக்கையின்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 110 விதியின் கீழ் உருவ சிலை மற்றும் அரங்கம் அமைக்க அறிவிக்கப்பட்டதையடுத்து முன் மொழிவுகள் அனுப்புமாறு தெவிக்கப்பட்டதற்கிணங்க, மேற்படி இடத்தில் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்ப நாயக்கர் அவர்களுக்கு உருவச் சிலை அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 3009/2021/எப்1)</td><td></td></tr>
<tr><td>11</td><td>1725</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் பொறியியல் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக (Technical Assistant Grade-II) மூன்று நபரை 6 மாத காலத்திற்கு பணியமர்த்திக் கொள்ளும் பணிக்கு ரூ.4,70,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு 04.10.2021-ல் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>M/s.RSM & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.11% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Raj & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.53% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.RSM & Co, Udumalpet என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 2274/2021/இ1)</td><td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப் பட்டது</td></tr>
<tr><td>12</td><td>1726</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் பொறியியல் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக (Technical Assistant Grade-I) இரண்டு நபர்களை 6 மாத காலத்திற்கு பணியமர்த்திக் கொள்ளும் பணிக்கு ரூ.3,80,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு 04.10.2021-ல் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>M/s.RSM & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.10% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Raj & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.57% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.RSM & Co, Udumalpet என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 2248/2021/இ1)</td><td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப் பட்டது</td></tr>
<tr><td>13</td><td>1727</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் வ.உ.சி.சாலை, கச்சேரி வீதி தாராபுரம் சாலை, பெரியார் நகர், சதாசிவம் வீதி மற்றும் பழனி - பொள்ளாச்சி சாலையில் உள்ள மழைநீர் வடிகாலில் நவீன FRC அமைத்து Frame உடன் மூடு பலகைகள் பொருத்தும் பணிக்கு &.9,80,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு</td><td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>19.11.2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>M/s.V.Meenal & Co, Devakottai.</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.50% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Selliamman & Co, Coimbatore</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.41% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.50% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.V.Meenal & Co, Devakottai, என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
(ந.க.எண் 2957/2021/இ1)</td><td></td></tr>
<tr><td>14</td><td>1728</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியிலுள்ள திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் வீடுகளில் திடக்கழிவுகளை சேகரம் செய்யும் பணிக்கு 31 Battery operated vehicles பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் சிறு சிறு பழுதுகளை நீக்கி பராமரித்து இயக்கத்தில் வைக்க ஒரு வருட காலத்திற்கு ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ.4,10,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு 19.11.2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>M/s.Star industries and Engineering, Dharapuram</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.09% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Sudhar Engineering, Dharapuram</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.87% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.09% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Star industries and Engineering, Dharapuram என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
(ந.க.எண் 3048/2021/இ1)</td><td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப் பட்டது</td></tr>
<tr><td>15</td><td>1729</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான மத்திய பேருந்து நிலையத்தில் பயணிகள் காத்திருப்பு பகுதி மற்றும் கடைகள் அமைந்துள்ள கட்டிடத்தின் மேற்கூரையில் ஆங்காங்கு சிமெண்ட் கான்கிரீட் மற்றும் பூச்சு உதிர்ந்து கம்பி வெளியில் தெரியும் வண்ணம் உள்ளது. மேலும் மத்திய பேருந்து நிலையத்தில் புறக்காவல் நிலையம் அருகில் அமராவதி மற்றும் மூணாறு பேருந்துகள் நிறுத்துமிடத்தில் மேற்கூரைப் பூச்சு பணிகள் மற்றும் பராமரிப்பு பணிக்கு ரூ.2,50,000/- மதிப்பீட்டில் செய்வதற்கு 26.11.2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>M/s.RSM & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.06% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Raj & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 6.64% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.06% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.RSM & Co, Udumalpet</td><td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 2958/2021/இ1)</td><td></td></tr>
<tr><td>16</td><td>1730</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியின் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 61150 ஆகும். தற்போதைய உத்தேச மக்கள் தொகை 63580 ஆகும். இந்நகராட்சியின் பரப்பளவு 7.41 ச.கி.மீ கொண்டு 33 வார்டுகள் உள்ளடக்கியதாகும். இந்நகரில் 17526 குடியிருப்புகளும் 3068 வர்த்தக நிறுவனங்களும் உள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 19 மெட்ரிக் டன் அளவு திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி நடைபெற்று t U » w J.<br>பார்வை 1ல் கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் வெளிகொணர்வு மூலமாக பணியாளர்களை அமர்த்தி சுகாதாரபணிகளை மேற்கொள்ள வேண்டி வெளியிட்டுள்ள அளவுகோல்படி இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவுக்கு தேவையான பணியாளர்களின் விபரம் கீழ்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>அளவு கோல்கள் படி</th><th>தற்போதுள்ள நிரந்தர பணியாளர்கள்</th><th>தேவைப்படும் பணியாளர்கள்</th></tr>
<tr><td>1</td><td>தூய்மை பணியாளர்கள்</td><td>179</td><td>82</td><td>97</td></tr>
<tr><td>2</td><td>துப்புரவுபணி மேற்பார்வையாளர்கள்</td><td>17</td><td>10</td><td>7</td></tr>
<tr><td>3</td><td>வாகன ஓட்டுநர்கள்</td><td>16</td><td>3</td><td>13</td></tr>
</table>
மேற்கண்ட அளவுகோலின்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான 97 தூய்மைபணியாளர்கள், 13 வாகன ஓட்டுநர்கள் மற்றும் 7 துப்புரவு பணிமேற்பார்வையாளர்களை வெளிகொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக்கொள்ள உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்:1132/2021/எச்2)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17</td><td>1731</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி தரை தளத்தில் தற்போது வடக்குப் பகுதியில் இயங்கி வரும் கணிணி வசூல் மையத்தை பொதுமக்கள் எளிதாக அணுகி (காத்திருக்கும் வசதிகளுடன்) பணம் செலுத்தி செல்லும் வகையில் வசூல் மையத்தை தென் மேற்கில் உள்ள சுகாதாரப் பிரிவிற்கு மாற்றியமைக்க வேண்டியுள்ளது. இதற்குத் தேவையான மின் இணைப்பு வசதிகள், தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்த உரிய மின்னணு சாதனங்கள் மற்றும் மின் இழைகள் அதற்கான குழாய்களுடன் அமைக்கும் பணி செய்யவும் இதற்காகத் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேசமாக ரூ.1,60,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பிட்டிற்கும் இதனை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 3192/2021/இ1) | |
| **18** | 1732 | உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக தரைதளத்தில் தற்போது இயங்கி வரும் கணிணி வசூல் மையத்தை தென்மேற்கில் அமைந்துள்ள சுகாதாரப் பிரிவு அலுவலகத்திற்கு மாற்ற வேண்டியுள்ளது. இதற்கு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி தடுப்பு சுவர்கள் மற்றும் வசூல் கவுண்டர்களைக் கழற்றி எடுத்து பொதுமக்கள் எளிதாக அணுகி கட்டணங்களைச் செலுத்தி செல்லும் வகையில் சுகாதாரப்பிரிவு அறையில் கண்ணாடி கவுண்டர்கள் மற்றும் தடுப்புச்சுவர்கள் பொக்கிஷ அலமாரி ஆகியவை அமைக்கும் பணி செய்ய உத்தேசமாக ரூ.75,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பிட்டிற்கும் இதனை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 3193/2021/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **19** | 1733 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குச் சொந்தமான ஆணையாளர் குடியிருப்பில் மேற்கூரையில் பழுது ஏற்பட்டு மழைநீர் கசிந்து வருகிறது. எனவே ஆணையாளர் குடியிருப்பில் மேற்கூரையில் தட்டோடு மாற்றியமைத்து இதர பராமரிப்பு பணிகளை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் இதற்காக உத்தேசமாகத் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1.80 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 3194/2021/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **20** | 1734 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் உபயோகத்தில் உள்ள கழிவுநீர் வாகனத்திற்கு குறுகலான சந்துகள் மற்றும் அடைபட்டுள்ள சிறுபாலங்களின் இருபுறமும் தேங்கியுள்ள அதிகப்படியான கழிவுநீர் மற்றும் மழைநீரை உறிஞ்சி வெளியேற்ற சுமார் 45 மீட்டர் நீளத்திற்கு 110 மி.மீ விட்டமுள்ள PN16 HDPE குழாய்களும், கழிவுநீர் வாகனம் செல்ல இயலாத இடங்கள் மற்றும் பள்ளங்களில் தேங்கியுள்ள மழைநீரை உறிஞ்சி அகற்ற இரண்டு 5HP பெட்ரோல் என்ஜின் (3”X3”) அதற்குத் தேவையான Wheel platform உடன் 75எம்.எம், PN16 HDPE குழாய்களும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. இதற்கு உத்தேசமாக ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பிட்டிற்கும் இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 3191/2021/இ1) | அனுமதிக்கப் பட்டது |
| **21** | 1735 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பாதாள சாக்கடைத் திட்ட கோட்டம், பொள்ளாச்சி நிர்வாகப் பொறியாளர் அவர்களின் ஒப்பந்தம் எண்: DR/EE/TWAD/SEW/POL/AGT No 05/2021-2022 நாள்:14.09.2021-ன் படி உடுமலைப்பேட்டை நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தினை 01.10.2021 | அனுமதிக்கப் பட்டது |

முதல் 30.11.2021 வரை இயக்குதல் & பராமரிப்பு (Operation & Maintenance) பணிகளை மேற்கொள்ள M/s.SMV Projects, கோவை நிறுவனத்துடன் ஒப்பந்த தொகை ரூ.10,22,046/- (ரூபாய் பத்து இலட்சத்து இருபத்தி இரண்டாயிரம் நாற்பத்தி ஆறு மட்டும்) ஒப்பந்தம் செய்யப்பட்டு, மேற்படி நிறுவனத்தினரால் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு விபரம்

PART-1 ESTIMATE THE PERIOD 01.12.2021 TO 31.01.2021 – WORKING SHEET

| Sl. No | Description of work | Quantity in Nos / Day | Qty in Month | Rate in Figure Rs. | Amount Rs. |
|---|---|---|---|---|---|
| | No. of Staff required as per norms | | | | |
| 1 | Plant Operator (Rs.585.00x30days=Rs.17,550.00) | 2 Nos | 1 Month | 17,555.00 | 35,100.00 |
| 2 | Electrician Grade-I (Rs.636.00x30days=Rs.19,080.00) | 3Nos | 1 Month | 19,080.00 | 57,240.00 |
| 3 | Electrician Grade-II (Rs.633.00x30days=Rs.18,990.00) | 2Nos | 1 Month | 18,990.00 | 37,980.00 |
| 4 | Pump Operator (Rs.585.00x30days=Rs.17,550.00) | 1 No | 1 Month | 17,550.00 | 17,550.00 |
| 5 | Laboratory Chemist (Rs.714.00x30days=Rs.21,420.00) | 1No | 1 Month | 21,420.00 | 21,420.00 |
| 6 | Laboratory Assistant (Rs.422.00x30days=Rs.12,780.00) | 1 No | 1 Month | 12,660.00 | 12,660.00 |
| 7 | Sewer Cleaner (Rs.498.00x30days=Rs.14,940.00) | 2 Nos | 1 Month | 14,940.00 | 29,880.00 |
| 8 | Sewer Cleaning Machine Operator (Heavy duty) (Rs.633.00x30days=Rs.18,990.00) | 1 No | 1 Month | 18,990.00 | 18,990.00 |
| 9 | Manhole Cleaning Machine Operator (Light duty) (Rs.592.00x30days=Rs.17,760.00) | 2 Nos | 1 Month | 17,760.00 | 35,520.00 |
| 10 | Watch man / Helper (Rs.498.00x30days=Rs.14,940.00) | 3 Nos | 1 Month | 14,940.00 | 44,820.00 |
| | Sub Total –I per Month | 18 Nos | | | 3,11,160.00 |
| | Workers Welfare Fund @ 1.00% as per Labour Act of Asub Total - I | | | | 3,111.60 |
| | ESI @ 3.25% as per Labour Act of Sub Total –I | | | | 10,112.70 |
| | EPF @ 13.16% as per Labour Act of Sub Total –I | | | | 40,948.66 |
| | Sub Total –II per Month | | | | 3,65,332.00 |
| | Sub Total –II per Month | | | | 3,65,333.00 |
| | Total Cost –III (for the period from 01.08.2021 to 30.09.2021) | | | | 7,30,666.00 |
| | GRAND TOTAL | | | | 7,30,666.00 |

PART -II JET RODDING MACHINE VICHEAL HOSE RENIVEL WORK

மேற்படி ஒப்பந்தத்தின்படி M/s.SMV Projects, கோவை நிறுவனத்தால் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.90% கூடுதலாக ஒப்பந்தபுள்ளி வழங்கப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது.

ஏற்கப்பட்ட விலை விகித விபரம் **(For Part I)** ரூ

| | | |
|---|---|---|
| 01.12.2021 முதல் 31.01.2022 வரை இயக்குதல் & | = | 724442.00 |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>பராமரித்தலுக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்தின் மதிப்பீட்டு தொகை (மாதம் ஒன்றிற்கு ரூ.362221/- வீ தம் இரண்டு மாதங்களுக்கு (Inclusive of EST @ 3.25% and EPF @ 13.16%)</td><td></td><td></td></tr>
<tr><td>ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓப்பந்தப்புள்ளி கூடுதல் (+) 2.90 %</td><td>=</td><td>21009.00</td></tr>
<tr><td>Worker Welfore Fund @ 1.00% as per Labour Act</td><td>=</td><td>7244.00</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>=</td><td>752695.00</td></tr>
</table>
இந்நகர் மன்றத் தீர்மானம் எண்:1628 நாள்:13.08.2021 அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்படித் திட்டம் இந்நகராட்சியால் 18.08.2021 முதல் ஏற்பளிப்பு செய்யப்பட்டு, தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி M/s.SMV Projects, கோவை நிறுவனம் மூலம் (Outsourcing) இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
தற்போது 01.12.2021 முதல் தொடர்ந்து உடுமலைப்பேட்டை நகராட்சியின் மூலம் பராமரிப்பு செய்ய போதிய தொழில் நுட்ப பணியாளர்கள் இல்லாததால், தனியார் அமைப்புகள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பாதாள சாக்கடைத் திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை தனியார் அமைப்புகள் மூலம் மேற்கொள்ள (Outsourcing) உரிய மதிப்பீட்டுகள் தயார் செய்ய, தொழில்நுட்ப பணியாளர்களுக்கான ஊதிய விகிதங்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள நகராட்சிகளில் ஒரே மாதிரியாக நிர்ணயம் செய்ய, நகராட்சி நிர்வாக இயக்குநகரத்தால் ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்து வெளியிடப்பட உள்ளது.
எனவே அவ்வாறு வெளியிட்ட பின்பு தான் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து உரிய அனுமதி பெற்று இந்நகராட்சியால் மேல்நடவடிக்கை தொடரப்பட வேண்டியுள்ளது. அதன் கராணமாக பாதாள சாக்கடைத் திட்டத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பின் அவசியம் கருதி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 01.10.2021 முதல் 30.11.2021 காலம் வரை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள M/s.SMV Projects, கோவை நிறுவனம் மூலமாகவே வருகிற 01.12.2021 முதல் 31.01.2022 வரை இரண்டு மாதங்களுக்கு பராமரிப்பு செய்து கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ.752695/- க்கும் (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரத்தி ஆறுநூற்று தொன்னுற்று ஐந்து மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்7584/2002/இ2)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>22</td>
<td>1736</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட டவுன் சர்வே வார்டு எண். A, . பிளாக் எண்.5, நகரளவு எண்.31, பழைய க.ச.எண். 134Aல்உள்ள இடத்திற்கு</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | பட்டா வழங்கக்கோரி இந்நகராட்சி ஆணையரை நான்காம் பிரதிவாதியாக் கொண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.யு.கே. ராஜ்குமார் என்பவரால் W.P.No.20128-2021ன்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கிற்கு இந்நகராட்சியின் நிலை வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களை இந்நகராட்சி சார்பில் ஆஜராவதற்கும் வழக்கிற்கான செலவினங்களை வருவாய் நிதியில் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது;<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 2758/2021/எப்1) | |
| **23** | 1737 | இந்நகராட்சி பகுதிகளில் 33 வார்டுகளில் பகிர்மானக்குழாய் அமைப்புகள் 113 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 110 எண்கள் எண்ணிக்கைகள் கொண்ட கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகள், 81 எண்கள் சிறுமின் விசை பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகளும் இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர் கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடன் சரிசெய்து சீரான குடிநீர் வழங்குவதுடன், ஆழ்துளை கிணறுகளின் கைப்பம்புகள் மற்றும் சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளையும் சரிசெய்து இயக்கத்தில் தொடர்ந்து இருக்குமாறு பேணப்பட வேண்டியுள்ளது. தற்போது இந்நகராட்சியில் குடிநீர் கசிவுகளையும், ஆழ்துளை கிணறு பணிகளையும் உடன் அவ்வப்போது மேற்கொள்ள போதிய குடிநீர் பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் அதற்குண்டான உதிரி பாகங்கள் இல்லாத காரணத்தினாலும் ஒப்பந்தப்புள்ளி பெற்று பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு செவ்வனே பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே குடிநீர் பணிகளின் அவசியம் கருதி இந்நகராட்சியில் வார்டு எண் : 1 முதல் 16 வரை பகுதிகளில் ஏற்படும் மேற்படி குடிநீர் சம்மந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 3051/2021/இ2) | அனுமதிக்கப் பட்டது |
| **24** | 1738 | உடுமலைப்பேட்டை நகராட்சி குடிநீர் ஆதாரமான திருமூர்த்தி அணையின் மூலமாக நீர் பெறப்பட்டு தலைமைக்குடிநீர் நிலையத்தில் சுத்திகரிப்பு செய்யப்பட்டு நகரில் உள்ள 9 எண்ணிக்கையிலான மேல்நிலைத் தொட்டிகள் மூலம் தினசரி ஒரு கோடி லிட்டர் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்காக 9 மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் தலைமைக்குடிநீர் நிலையத்திலிருந்து வரும் தண்ணீரில் உள்ள பாசியை (Algac Growth) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை நீர் பகுப்பாய்வாளர் அவர்களின் ஆலோசனைப்படி நீக்கம் செய்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு தற்போது சோடியம் ஹைபோ குளோரைட் நாள் ஒன்று 350 கிலோ அளவிற்கு தேவைப்படுகிறது. எனவே 185 நாட்களுக்கு வாங்குவதற்காகும் உத்தேச செலவினம் ரூ.9.93/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**(ந.க.எண் 3083/2021/இ2)** | அனுமதிக்கப் பட்டது |
| **25** | 1739 | இந்நகராட்சி பகுதிகளில் 33 வார்டுகளில் பகிர்மானக்குழாய் அமைப்புகள் 113 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 110 எண்கள் எண்ணிக்கைகள் கொண்ட கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகள், 81 எண்கள் சிறுமின் விசை பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகளும் | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர் கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடன் சரிசெய்து சீரான குடிநீர் வழங்குவதுடன், ஆழ்துளை கிணறுகளின் கைப்பம்புகள் மற்றும் சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளையும் சரிசெய்து இயக்கத்தில் தொடர்ந்து இருக்குமாறு பேணப்பட வேண்டியுள்ளது. தற்போது இந்நகராட்சியில் குடிநீர் கசிவுகளையும், ஆழ்துளை கிணறு பணிகளையும் உடன் அவ்வப்போது மேற்கொள்ள போதிய குடிநீர் பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் அதற்குண்டான உதிரி பாகங்கள் இல்லாத காரணத்தினாலும் ஒப்பந்தப்புள்ளி பெற்று பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு செவ்வனே பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே குடிநீர் பணிகளின் அவசியம் கருதி இந்நகராட்சியில் வார்டு எண் : 17 முதல் 33 வரை பகுதிகளில் ஏற்படும் மேற்படி குடிநீர் சம்மந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 3052/2021/இ2)</td><td></td></tr>
<tr><td>26</td><td>1740</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி 14வது வார்டுக்குட்பட்ட UKC நகர் 14வது வீதி பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தால் அருகில் உள்ள பாதாள சாக்கடை ஆழ்நுழை குழிகளில் நீர் நிரம்பி பொங்கி பக்கத்தில் உள்ள கட்டிடங்களை சுற்றி நீர் தேங்கி சுகாதார கேடு ஏற்பட்டு வருகிறது. எனவே பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு பாதாள சாக்கடை ஆழ்நுழை குழிகளில் தேங்கியுள்ள மழைநீரை 4” PVC குழாய்கள் அமைத்து அருகில் உள்ள ஓடையில் கொண்டு சேர்பதற்காகும் உத்தேச செலவினம் ரூ.30,000/- ஆகும், பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு அடிப்படையில் நகராட்சி அங்கீகாரம் பெற்ற ஒப்பந்ததாரர் M/s.RSM & Co மூலமாக ஒப்பந்த அடிப்படையில் பணிமேற்கொள்ளவும் வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண் 3082/2021/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>27</td><td>1741</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021-22ம் ஆண்டு அபிராமி நகர் பூங்காவில் குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்துதல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசூரியன் நாளிதழில் 17.11.2021 அன்று பிரசுரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணத்தொகை ரூ.25,284/-ஐ தினசூரியன் நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 2690/2021/இ1)</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>28</td><td>1742</td><td>இந்நகராட்சியின் ஆணையாளரின் குடியிருப்புக்கு புதியதாக கணினி இயக்குவதற்கு Network Connection கொடுப்பதற்கும்.<br><table><tr><td>FTTH MODEM Connection Plus Accessories for Tailtel</td><td>:</td><td>Rs. 5500.00</td></tr><tr><td>Package Renewal FUP 200 Mbps _1 TB</td><td>:</td><td>Rs. 2299.82</td></tr><tr><td>Total</td><td>:</td><td>Rs. 7799.82</td></tr></table>மேற்படி Network Connection – UDUMALAI FIBER NET என்ற நிறுவனம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | மூலம் பொருத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிறுவனத்திற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.7800/-ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண் 3352/2021/இ1) | |
| **29** | 1743 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவு கணினிகளுக்கும் கணினி அறையிலிருந்து Network Connection கொடுக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வந்தது. தற்போது பெய்துவரும் அதிக மழை காரணத்தினாலும், அதிக மின்னழுத்தம் காரணத்தினாலும் Router பழுதாகி விட்டது. அதனால் அனைத்து பிரிவுகளிலும் நெட்வோர்க் இயங்கவில்லை. அலுவலக அவசர அவசியம் கருதி ஆணையாளரின் ஒப்புதலுடன் உடனடியாக புதிய Router வாங்கி பொருத்தப்பட்டு, அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை விநியோகம் செய்த நிறுவனமான M/s.Shankar Network Authorized RailWire Broadband Services என்ற நிறுவனத்திற்கு செலவின தொகை ரூ.3009/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்<br>*(ந.க.எண் 3351/2021/இ1)* | அனுமதிக்கப் பட்டது |

(ஒப்பம்) ப.சத்தியநாதன்,
**ஆணையாளர்/ தனி அலுவலர்**

**ஆணையாளர்,**
**உடுமலைப்பேட்டை நகராட்சி.**